அதேநேரத்தில், 29–1–2012 அன்று 'தின மலர்' என்ற ஒரு நாளேடு மிகப் பெரும்பான்மை சமூகமான வன்னியர் சமுதாயத்தைக் கொச்சைப்படுத்துகின்ற வகையிலும், கேவலப்படுத்துகின்ற வகையிலும் 'குற்றப் பரம்பரை' என்றும் 'இவர்கள் கண்டிக்கத்தக்கவர்கள்' என்றும் சாதிக் கலவரத்தைத் தூண்டுகின்ற வகையிலும் செய்தி வெளியிட்டுள்ளது. இதுபோன்ற பத்திரிகைகள், பத்திரிகை தர்மத்தை மறந்து தனிப்பட்ட சமூகத்தைப் புண்படுத்துகின்ற வகையில் வெளியிடுகின்ற தகவலை, பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக இந்த அரசுக்குத் தெரிவித்து, இதுபோன்ற பத்திரிகைகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1–2–2012) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 2–39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் இரண்டாம் உறுப்பினரின் வேற்றுப் பணிக் காலத்தினை நீட்டிப்பு செய்தது குறித்து 25–5–2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு(இ2)த் துறையின் அரசாணை (3டி) எண் 9–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல்

உறுப்பினர் (நீதிமுறை) நியமித்தது குறித்து 13–6–2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு(இ2)த் துறையின் அரசாணை (2டி) எண் 92–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

4. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

5. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2012 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)